# லக்கல-பள்ளேகம பிரதேச சபை

## மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 03 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 நவம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள லக்கல-பள்ளேகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிலையான சொத்துக்களின் மீதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி என்பன ஒன்றுக்கொண்டு சமமாக இருக்க வேண்டிய போதிலும் அக் கணக்குகளுக்கிடையே ரூபா 4,146,848 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,867,148 தொகையான நிலுவை ஓய்வூதியப் பங்களிப்புக்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) களஞ்சியப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக களஞ்சிய முற்பணக் கணக்கு முறையொன்று பின்பற்றப்படாமல் கொள்வனவுகள் நேரடியாக செலவினத் தலைப்புக்களில் வரவு வைக்கப்பட்டிருந்தன.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,508,833 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 435,358 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின்/அறிக்கைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 494,150 ஆக இருந்தமையால் ரூபா 58,792 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,111,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 356,480 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட 122-1-001-4-0000003 ஆம் இலக்க வங்கிக் கணக்கின் வங்கிக் கணக்கினக்கக் கூற்றில் காணப்படுகின்ற 2005 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,694 தொகையான தேறாத வைப்புக்கள் மற்றும் 1998 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் ரூபா 13,069 தொகை அதிகரித்துச் செலுத்தப்பட்டதாக காணப்படுகின்ற மீதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்காக முன்னாள் தலைவருக்கு வழங்கப்பட்ட ரூபா 300,000 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொங்கல் கணக்கில் காணப்படுகின்ற 2007 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதிக்குரிய மீதிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையின்றிக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2 | - | 72 |
| (ii) | வாடகை | 607 | 484 | 208 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 537 | 543 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,012 | 9,236 | 3,246 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,784,100 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 150,650 |

### 2.3.3 நிலுவை ஏக்கர் வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) (அ) பிரிவின் பிரகாரம் செலுத்தப்பட்டிராத ஏக்கர் வரி தொடர்பாக துரித நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிலுவையாக இருந்த ஏக்கர் வரி மீதி ரூபா 72,532 ஆக இருந்தது.

### 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

ரூபா 727,500 பெறுமதியான 04 சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்படாத 03 சொத்து விடயங்கள் என்பன செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

### 2.5 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புக்களும்

மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபை வசம் காணப்பட்ட டிஜிட்டல் புகைப்படக்கருவி மற்றும் அதற்குரிய மெமரி அட்டை என்பவற்றின் பற்றாக்குறை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் நட்டத்திற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினத்தில் கடமைகளைச் செய்தல் முன் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில் ரூபா 195,806 தொகையான மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினச் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 19 (1) (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பதவியொன்றைத் தோற்றுவித்தல், சம்பளத்தை தீர்மானித்தல் போன்றவைகளுக்காக உள்ளூராட்சி

ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி 15 ஊழியர்கள் நாட்சம்பள அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,336,244 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4, 6.3 ஆம் பந்திகள் மற்றும் 1988 இன் பிரதேச சபையின் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 207 மற்றும் 208 ஆவது விதிகளின் பிரகாரம் கொள்வனவுகளின் போது போட்டியாளர்களின் கேள்வி முறைமைகள் பதிவுத் தபால் மூலம் கூறுவிலைகள் கோர வேண்டிய போதிலும் அதற்கு முரணாக நேரடி கூறுவிலைகள் மீளாய்வாண்டின் 02 சந்தர்ப்பங்களின் போது பெறப்பட்டு ரூபா 316,678 தொகையான களஞ்சியப் பொருள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்ப்ட்டிருந்தன.

## 2.8 ஒப்பந்த நிருவாகம்

கிவுலவாடி நீர்த் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,400,000 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. கொடுப்பனவு பற்றுச்சீட்டில் செலவின விடய இல 03 இல் குறிப்பிடப்பட்ட 63 கி.மீ 01 கேட்வேல் பொருத்துவதற்காக ரூபா 10,223 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான கேட்வேல் பொருத்தப்பட்டிராததுடன் செலவின விடய இல 10 இன் கீழ் மி.மி 40 அலுமினியக் கைப்பிடி பொருத்துவதற்காக ரூபா 5,897 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பிளாஸ்டிக் கைப்பிடி பொருத்தப்பட்டிருந்தது. அவசியமின்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த இச்செயற்திட்டம் போதியளவான நீர் காணப்படாமை மற்றும் உரிய நியமங்கள் இன்றியும் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையினால் 2012 செப்தெம்பர் 26 கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) டபிள்யூபீஎல்எப் - 4859 ஆம் இலக்க கப் வாகனத்தை பழுதுபார்ப்பதற்காக கராஜிற்கு 2011 திசெம்பர் மாதத்தின் போது கையளிக்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு மீளக் கையளிப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2012 செப்தெம்பர் 26 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிராமிய நீர் வழங்கள் மற்றும் ஆரோக்கிய வெற்றிடத்தினால் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சீபீரீஎக்ஸ் 6002 மற்றும் சீபீரீஎக்ஸ் 6005 ஆம் இலக்க 02 மோட்டார் சைக்கிள்களின் உரித்தை சபைக்கு கையளித்தல் மற்றும் அதன் பெறுமதியினை மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் சீபீஆர்பீ – 2996 ஆம் இலக்க உழவு இயந்திரம் மொரகஹகந்த – உத்தேச திட்டத்திற்காக மணித்தியாலத்திற்கு ரூபா 290 படி வாடகை அடிப்படையில் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு 2011 செப்தெம்பர் 24 ஆந் திகதி தொடக்கம் வழங்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(உ) ஒப்பந்த நிருவாகம்